2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண். 181, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு நிதியமைச்சர்.

181–

சிறுசேமிப்பில் அதிக அளவு தொகையை வசூல் செய்யும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் பரிசு வழங்குதல்

***23225-திரு. ஆ. சுப்புரத்தினம்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) இலக்கை மிஞ்சி, அதிக அளவு தொகையை சிறுசேமிப்பில் முதலீடு செய்யக் காரணமாக இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிறு சேமிப்பு வசூலை ஊக்குவிக்கும் பொருட்டு, மாவட்டங்களுக்கு அரசு நிர்ணயிக்கும் இலக்கை மிஞ்சி வசூல் செய்யும் மாவட்டங்களுக்கு ஊக்கத் தொகையும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஒரு கேடயமும் மற்றும் 150% வசூல் புரியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இது தவிர இன்னொரு கேடயமும், 200% வசூல் புரியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கூடுதலாக மற்றொரு கேடயமும் வழங்குமாறு அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1990-91ல் தங்களது பெரு முயற்சியால் சிறு சேமிப்பு வசூல் சாதனை படைத்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ரூ. 1,000/-க்கு மிகாமல் அவர்களுக்கென ஒரு கேடயமும் வழங்குமாறு 16.12.91ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறே 1991-92 மற்றும் 1992-93ல் சிறு சேமிப்பு வசூலில் சாதனை படைத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தங்கள் மாவட்டங்களுக்கு வழங்கிய கேடயத்தை தவிர அவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் ஒரு கேடயமும் வழங்க அரசு 18.6.93-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறு சேமிப்புக்கான இலக்கீடு நிர்ணயம்

செய்யும் போது என்ன அடிப்படை கையாளப்படுகிறது ? சிறு சேமிப்பில் அதிக முதலீடு செய்யும் மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளுக்கு அதிக அளவு நிதி ஒதுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்தினுடைய பொருளாதாரச் சூழ்நிலை, ஆங்காங்கு இருக்கிற வணிகத் தன்மைகள். ஆங்காங்கு இருக்கிற தொழில் வளர்ச்சிகள், மக்களுக்கு இருக்கிற வாழ்க்கைத் தரம், அவர்கள் சேமிப்பு செய்வதற்காக இருக்கின்ற தன்மைகள் ஆகியவற்றை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்றவாறு நாம் இலக்கினை நிர்ணயிக்கிறோம். அந்த இலக்குகள் பல்லாண்டுக் காலத்திற்கு முன்பே நிர்ணயிக்கப்பட்டு, இந்த இலக்கை அவர்கள் எட்டுகிறார்களா அல்லது கூடுதலாக ஆக்குகின்றார்களா அல்லது குறைவாக இருக்கிறதா என்று கணக்கு இடுகிறபோது ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒவ்வொரு மாவட்டமும் எவ்வளவு தாங்கும் என்ற கணக்கு அரசுக்குத் தெரியவருகிறது. அந்த அடிப்படையிலே தான் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றன. அவரவர்கள் நாம் எவ்வளவு இலக்கு நிர்ணயிக்கிறோமோ அந்த இலக்குக்கு எவ்வளவு வசூல் செய்து தருகிறார்களோ அந்த அளவிலே ரூபாய் 10 லட்சத்திலிருந்து ரூபாய் எழுபத்தைந்து லட்சம் வரையில் மாவட்டங்களுக்கு ஊக்கத் தொகைத் தரப்படுகிறது. அந்த ஊக்கத் தொகையைப் பயன்படுத்தி அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தந்த மாவட்ட மக்களுக்கு தேவையான, இன்றியமையாத சில நலப்பணிகளைச் செய்ய இயலும்.

முற்பகல் 10-05

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இலக்கை மிஞ்சி அதிக அளவுத் தொகையை சிறுசேமிப்பில் முதலீடு செய்யக் காரணமாக இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கேடயங்கள் வழங்கப்படுவதாக இங்கே எடுத்துக் கூறினார்கள். நான் இங்கே கேட்கவிரும்புவது, மாவட்டத்திற்கு அதிக அளவுக்கு முதலீடு செய்யக் காரணமாக விளங்கக்கூடிய அதிகாரிகளுக்கும் இப்பேர்ப்பட்ட ஊக்கத் தொகை-ஏதேனும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதில் அதிகாரிகள் என்று வருகின்றபோது, பிரித்துப் பார்ப்பது கடினமான ஒன்று. ஆக அப்படி

குறிப்பிட்ட அதிகாரிகள் என்று தனித்தனியாக பார்க்காமல் பொதுவாக எல்லோருக்கும் சேர்த்துத்தான் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பொதுவாக நாம் தருகிறோம். தனித் தனி வகைகளிலே நாம் பார்த்துச் சொல்வோமானால், மற்ற மற்ற அதிகாரிகள் தங்களுக்கு கீழே இருப்பவர்களைக் கொண்டு எல்லா காரியத்தையும் செய்து முடித்துவிட்டு அதைத் தாங்கள் சாதித்தோம் என்று கூறுகின்ற அளவுக்கு கேடயத்தைப் பெற்றுவிட முடியும். ஆகவேதான் எல்லா அதிகாரிகள், அலுவலர்கள் ஆக அத்தனைபேருக்கும் சேர்த்து மாவட்டத்தின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தருகிறோம் என்று சொன்னால் எல்லா அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் அது பொருந்தி வரும். அதைத் தவிர மாவட்ட மக்களும் இதிலே ஈடுபடுகிறார்கள். அதிகமான அளவு சிறு சேமிப்புத் தொகையை வைப்பு நிதியாக வைக்கிறார்கள் என்ற காரணத்தினாலேதான் அந்த மாவட்டங்களுக்கு ரூ. 10 லட்சத்துலிருந்து ரூ. 75 லட்சம் வரையில் அவர்கள் சிறு சேமிப்புக்குத் தருகின்ற தொகைக்கு ஏற்ப நாம் பொதுவாக அளித்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு முதலீடு செய்வதால் மக்களுக்கு என்ன பலன்? அதனால் அரசுக்கு என்ன லாபம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு நாட்கள் சட்டமன்ற பேரவை உறுப்பினராக இருந்து இந்த சிறு சேமிப்பினைப் பற்றி அவர் புரிந்து கொள்ளாமல் இருக்கிறாரே என்று தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. இது பற்றி பல தடவைகள் விளக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சிறு சேமிப்பிலே வைப்புத் தொகை நிதி வைக்கின்றவர்களுக்கு ஏராளமாக வசதி வாய்ப்புகள் ஏற்படுகின்றன. வங்கிகளிலே அவர்கள் வைப்பு நிதி வைப்பதன் மூலம் கிடைக்கின்ற வட்டித் தொகையின் அளவை விட அதிகமான அளவுக்கு இதிலே கிடைக்கிறது என்பது மட்டுமல்ல. இதிலே பல பாதுகாப்பு நடவடிக்கைகளும் இருக்கிறது. ஆயிரம் ரூபாய்க்கு மேல் சிறு சேமிப்பிலே ஈடுபடுத்துகின்றவர்களுக்கு ஊக்கத் தொகையும் தருகிறோம். அவர்களை ஈடுபடுத்துகின்ற அளவுக்கு பாடுபட்டு வருகின்ற முகவர்களுக்கும் ஊக்கத்தொகை தருகிறோம். அதைத் தவிர பரிசுச் சீட்டுக்களும் வழங்கப்படுகின்றன. 500 ரூபாய்க்கு மேல் முதலீடு செய்கின்றவர்களுக்கு ஒரு பரிசு கூப்பன் என்று அளவு இருக்கிறது. மாவட்டத்திற்குள் ஒரு லட்சம் பரிசு கூப்பன்கள் சேர்ந்ததற்குப் பிறகு குலுக்கல் நடத்தி 619 பரிசுகள் கிடைக்கத் தக்க அளவுக்கு வாய்ப்பு

வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அரசைப் பொறுத்த வரையிலே என்னவென்று கேட்டால் இந்திய அரசு நிதி அமைச்சகப் பொருளாதார விவகாரத் துறை குறிப்பாணை எண் F5(3)-DD/93, நாள் 28-5-1993-இன்படி, நிகர சிறு சேமிப்பு வசூலிலிருந்து, மாநில அரசுக்கு அளிக்கப்படும் 75 சதவீதக் கடன் தொகைக்கு வட்டி வீதம் 15 சதவீதமாக, 1-6-1993-இல் இருந்து உயர்த்தப்பட்டுள்ளது. இந்த கடனைத் திருப்பி செலுத்தவேண்டிய நிலைமைகள் இருக்கின்றன. என்றாலும் உதாரணத்திற்கு 400 கோடி ரூபாய் வசூல் வருகிறது என்று சொன்னால் அதிலே 100 கோடி ரூபாய் மத்திய அரசின் பங்கிலும் 300 கோடி ரூபாய் மாநில அரசுக்கும் தருகிறார்கள். இந்த திட்டத்தை உடனடியாக பயன் படுத்துவதற்கு மாநில அரசிலே ஏற்படுகின்ற நிதிப்பற்றாக்குறையை ஈடுகட்டவும், உடனடி செலவுகளை மேற்கொள்ளவும் இந்த 300 கோடி ரூபாய் பயன்படுகிறது. அதிலே இன்னொரு லாபம் என்னவென்றால் அதை 5 வருடத்திற்குப் பிறகு கட்டத் தொடங்கினால் போதும். 20 ஆண்டு காலத்திற்குள் கட்டினாலும் போதும். வங்கிகளிலே 18½ சதவிகிதம் கொடுக்கத்தக்க நிலையில் இப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்றதன் காரணமாக மாநில அரசுக்கும் நன்மைகள் இருக்கிறது. மத்திய அரசுக்கும் நன்மைகள் இருக்கிறது. இதிலே ஈடுபடுகின்ற பொது மக்களுக்கும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பில் அதிகமான இலக்கை மிஞ்சுகிற அளவு வசூலித்த அரசு அதிகாரிகள் அனைவரின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பரிசு வழங்குவதைப் போல சிறுசேமிப்பு முக்கியத்துவம் கருதி வசூலிலே ஈடுபட்டு அதிலே ஒத்துழைப்புத் தருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவியினுடைய திருக்கரங்களால் பரிசு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற பேரவை உறுப்பினர்கள் முகவர்களாக மாறி, அவர்கள் சிறு சேமிப்பில் ஈடுபடுவார்களேயானால் முகவர்களுக்கு கொடுக்கின்ற இன்சென்டிவ்-ஊக்கத்தொகை இவர்களுக்கும் வழங்கப்படும். எனக்கு இருக்கிற வருத்தமே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் பலபேர் ஈடுபடாமல் இருக்கிறார்களே என்பதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கனத்தின் சின்னமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற நடமாடும்

பல்கலைக கழகம் ஐயா நாவலர் அவர்கள் இந்தத் துறையிலே மிகச் சிறப்பான முறையிலே ஏராளமான தொகையினை வசூல் செய்வதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆக்கத்தையும், ஊக்கத்தையும் வழங்கியதோடு எங்கள் பகுதிக்கு அமைச்சர் பெருந்தகைகள் எல்லாம் வந்து ஏராளமான தொகைகள் வசூல் செய்து கொடுத்தார்கள். அந்தத் தொகையிலே இருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒதுக்குகின்ற அந்தப் பணத்தில் என்னைப் போன்ற - அந்தியூர் தொகுதி போன்ற ஏழைத் தொகுதிகளுக்கு நிதியுதவி அதிகமாக, நீங்கள் கொடுக்கின்ற தொகையிலிருந்து அதிகமாக எங்கள் பகுதிகளுக்கு எல்லாம் வழங்கி அந்தத் தொகுதியினுடைய வளர்ச்சிக்கு நீங்கள் கொடுப்பதற்கு ஏதாவது சிறப்பு அறிவுரைகள் வழங்கப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டமும் சேர்த்துத் தருகிற சிறு சேமிப்பு நிதியினுடைய அளவைப் பொறுத்து அவர்களுக்கு நாங்கள் ஊக்கத் தொகை தருகிறோம். நான் முதலிலே சொல்லியபடி 10 லட்சத்திலிருந்து 75 லட்சம் வரையில் ஊக்கத்தொகைகள் தருகிறோம். இந்த ஊக்கத்தொகையைப் பொறுத்தவரையில், எது எதற்கு, எப்படி செலவழிக்கலாம் என்கின்ற முழு அதிகாரத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கொடுத்திருக்கிறோம். ஆகவே, மாநில அரசுக்கோ அல்லது நிதியமைச்சருக்கோ அல்லது நிதித் துறை செயலாளருக்கோ சொல்லிவிட்டு ஒவ்வொரு செலவையும் செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆனால் அதற்கு ஒழுங்கான கணக்கு வைத்திருக்க வேண்டும் என்று மட்டும் இருக்கிறது. ஆனால், யார் யாருக்கு, எது எதற்கு, எந்த எந்த தொகுதிக்கு செலவழிக்கலாம் என்பது முழுக்க முழுக்க மாவட்ட ஆட்சித் தலைவரைச் சார்ந்தது. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்து இருக்கிறது. எந்தத் தொகுதிக்கு, எவ்வளவு வாங்குவது, எந்த அளவுக்கு அவர்களிடத்திலேயிருந்து பெறலாம் என்பது உங்களுடைய சாமர்த்தியத்தைப் பொறுத்தது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு முதலீடு செய்வதில் தமிழகத்தில் எந்த மாவட்டம் முதலிடத்தில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போல் இதற்காக ஒதுக்கப்படும் இன்சென்டிவ்

1994 ஏப்ரல் 5]

தொகையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அனுமதிக்கலாம் என்று இருக்கிறது. அதற்கு டி.ஆர்.டி. பெர்மிஷனும் வேண்டும் என்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரே செய்யலாமா அல்லது டி.ஆர்.டி. அனுமதியும் தேவையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்சென்டிவ்-ல் இருந்து செலவு செய்வதற்கு இங்கே இருக்கிற இயக்குநருடைய அனுமதி தேவையா என்று கேட்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே சொன்னேன், அரசு ஆணை எண் 939, நிதி (சிறுசேமிப்பு)த் துறை, நாள் 9-12-1992 மற்றும் அரசு ஆணை எண் 67, நிதி (சிறுசேமிப்பு)த் துறை, நாள் 18-1-1994-இன்படி, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆண்டுதோறும் அளிக்கப்படும் சிறுசேமிப்பு ஊக்கத் தொகையில் 75 சதவிகிதத்தினை அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு தன்னிறைவுத் திட்ட நலப் பணிகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவரே (in his capacity as D.R.D.A.) (மாவட்ட ஊரக வளர்ச்சி அமைப்பு) செலவு செய்யலாம் (சென்னை மாவட்டம் நீங்கலாக) எனவும், மீதமுள்ள 25 சதவிகித ஊக்கத் தொகையில் ஓர் ஊராட்சி நிறுவனத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம் அளித்தது போக, மீதமுள்ள ஊக்கத்தொகையினை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே அவர்கள் விருப்பப்படி, மாவட்ட நலத் திட்டங்களுக்குச் செலவு செய்யலாம் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில், 1992-93-ஆம் ஆண்டிற்கு வழங்கிய ஊக்கத் தொகை முழுவதும் மாநகரத்திலுள்ள குடிசைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், பல்வேறு திட்டங்களின்கீழ் குடிசைப் பகுதிகளில் உருவாக்கப்பட்ட மூலதனச் சொத்துக்களை, சென்னை மாநகராட்சி தன்பொறுப்பில் எடுத்துக் கொள்ளவும், பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. அந்தவகையில் 1992-93-லே சேலம் மாவட்டம் முதலில் வந்தது. டி. ஏ. இராமையா அவர்கள் ஆட்சித் தலைவராக இருந்தபொழுது ஊக்கத்தொகை பெற்றிருக்கிறார். மதுரை மாவட்டமும் திரு. எஸ். ஆதிசேஷையா அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும்பொழுது பரிசு பெற்றிருக்கிறது. அதுபோன்று வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். இராமசுந்தரம் அவர்கள் அங்கே மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தபொழுது பெற்றிருக்கிறார்கள். அதுபோன்று புதுக்கோட்டை மாவட்டத்திலே

டாக்டர் அனுராதா ராஜீவன் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவராக இருக்கும்பொழுது பெற்றிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 182, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்:

182–

அவிநாசி தொகுதி, அண்ணாநகர் மக்களுக்கு பட்டா வழங்குதல்

**23975--டாக்டர் மு. சீனியம்மாள்:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அவிநாசி தொகுதி, அண்ணா நகர் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதியில் அண்ணா நகர் என்பது திருப்பூரும் அவிநாசியும் சந்திக்கின்ற இடம். இதில் நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் அரசுப் புறம்போக்கு இடத்தில் சுமார் 20 வருடங்களாக குடியிருந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மேல் பற்றும், பாசமும், பக்தியும் கொண்டவர்களாக, காலம் காலமாய் இரட்டை இலைக்கு மட்டுமே ஓட்டுப் போட்டவர்கள். தேர்தலின்போது இவர்களுக்கு பட்டா வழங்க நம் அரசு உதவும் என உறுதி அளிக்கப்பட்டது. இதே லைனில் திருப்பூர்பந்தல் பாளையம் மக்களுக்கு பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இருந்தும், அண்ணா நகர் மக்களுக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. கூடுதல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாலையில் அருகில் இருந்த குடிசைகளை அப்புறப்படுத்தி ரோட்டை அகலப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். தூண்டா மணிவிளக்காய், ஏழைகளின் எளிய குடிசைகளில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள இலவச மின்விளக்கு நம் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இதயத்தில் நிரந்தரமாக குடியேறி இருகின்ற அவிநாசித் தொகுதி மக்களுக்கு. அவர்களுடைய இதயமான அண்ணா நகர் பகுதி மக்களுக்கு பட்டா வழங்கிட மாண்புமிகு அமைச்சரவர்கள் அன்புடன் நம் தலைவி அவர்களுடைய உத்தரவைப் பெற்று, வழங்குவாரகளா என்று அறிய விரும்புகிறேன்.